RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-351 | 18 டிசம்பர் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## வங்கதேச இந்துக்களுக்கு ஆதரவாக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் ஆர்ப்பாட்டம்

புதுடெல்லி , டிச.18



வங்கதேசத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழியங்களை கண்டித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வங்கதேசத்தில் சில மாதங்களுக்கு முன்பு இட ஒதுக்கீடு சம்பந்தமான மாணவர்கள் போராட்டம் கலவரமாக உருவெடுத்தது. பிறகு அந்தப் போராட்டம் அங்குள்ள சிறுபான்மை இந்துக்கள் மீதான தாக்குதலாக வடிவெடுத்தது. இந்துக்களின் வணிக நிறுவனங்கள் சூறையாடப்பட்டன. இந்துக்கள் பொதுவெளியில் தாக்கப்பட்டனர்.

கலவர நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பிறகும் கூட வங்கதேசத்தில் இந்துக்கள் மீது மதரீதியான தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மதக் கலவரத்தை ஏற்படுத்தும் வன்முறையாளர்களை அடையாளம் காண வேண்டும் என குரல் கொடுத்து அமைதி வழியில் போராட்டம் நடத்திய இஸ்கான் அமைப்பின் துறவி சின்மோய் கிருஷ்ண தாஸ், வங்கதேச காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது ஜாமீனில் வெளியே வர முடியாதபடி தேச துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர் போராட்டத்தை மதக் கலவரமாக மாற்றி சிறுபான்மை இந்துக்கள் மீது தாக்குதல்கள் தொடர்ந்து அரங்கேறி வருவதால், அங்குள்ள இந்துக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வங்கதேசத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான அட்டூழியங்களை கண்டித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் எம்பி பிரியங்கா காந்தி உள்ளிட்டசுமார் 50 எம்பிக் கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக நடத்தப்படும் அட்டூழியங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் இவ் விஷயத்தில் இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வங்கதேச இந்துக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "வங்கதேசத்தில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீதான வன்கொடுமை சம்பவங்கள் தொடர்ந்து வெளிச்சத்திற்கு வருகின்றன. ஆனால் மோடி அரசு இந்த விவகாரத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காக்கிறது. வங்கதேசத்தில் உள்ள இந்துக்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரை பாதுகாக்கக் கோரி காங்கிரஸ் எம்பிக்கள் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கதேச விவகாரம் தொடர்பாக நேற்று மக்களவையில் பேசிய பிரியங்கா காந்தி வத்ரா, "வங்கதேசத்தில் உள்ள சிறுபான்மையினரான இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடக்கும் விஷயங்களுக்கு எதிராக இந்திய அரசு குரல் எழுப்ப வேண்டும். நமது அரசு வங்கதேச அரசுடன் பேசி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டும்." என வலியுறுத்தினார்.

## ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா மக்களவையில் தாக்கல்

புதுடெல்லி , டிச.18



ஒரே நாடு; ஒரே தேர்தல் மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மக்களவையில் தாக்கல் செய்தார்.

மக்களவைத் தேர்தல், மாநில மற்றும் யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளின் தேர்தல்களை ஒரே காலகட்டத்தில் நடத்தி முடிக்க பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான மசோதா மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் இந்த மசோதாவை தாக்கல் செய்தார்.

இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மசோதாவை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி, "ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாட்டின் மீது தாக்குதல் நடத்துகிறது. இந்த மசோதாவை பரிசீலிப்பது இந்த அவையின் சட்ட திறனுக்கு அப்பாற்பட்டது. அதைத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்" என்று கூறினார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்பி கல்யாண் பானர்ஜி, "ஒரே நாடு; ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை பாதிக்கிறது. சட்டப்பிரிவு 82 மற்றும் துணைப் பிரிவு 5 அனைத்து அதிகாரத்தையும் தேர்தல் ஆணையத்துக்கு வழங்குகிறது. உலகம் அழியும் வரை ஒரே கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது" என கூறி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். சிவசேனா (யுபிடி) எம்.பி. அனில் தேசாய் உள்ளிட்டோரும் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்குழு 90 நாட்களில் மசோதா குறித்து ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும். தேவைப்பட்டால் காலக்கெடு நீட்டிக்கப்படும். கூட்டுக்குழுவில் பாஜகவுக்கு பெரும்பான்மை இருப்பதால் அங்கு இந்த மசோதா ஏற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இந்த மசோதா மீது மக்களவை மற்றும் மாநிலங்களவையில் விவாதிக்கப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்படும்.

## "மார்ச் 2026க்குள் நக்சலிசத்தை ஒழிக்க வேண்டும்"
### உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்தல்

ராய்ப்பூர், டிச.18




2026ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க அனைத்து பாதுகாப்புப் படைகளும் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

நக்சல் தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாநிலமான சத்தீஸ்கரில் பாதுகாப்பு தொடர்பான உயர் ஆலோசனைக் கூட்டம் நேற்று (திங்கள் கிழமை) நடைபெற்றது. உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாநில முதல்வர் விஷ்ணு தியோ சாய், துணை முதல்வர் விஜய் ஷர்மா, மத்திய உள்துறை செயலர் கோவிந்த் மோகன், சத்தீஸ்கரின் தலைமைச் செயலர், காவல்துறை இயக்குநர் ஜெனரல் மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளின் (சிஏபிஎஃப்) இயக்குநர் ஜெனரல்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில், சத்தீஸ்கரில் இடதுசாரி தீவிரவாதத்தின் (LWE) நிலைமை குறித்து மதிப்பிடப்பட்டது. அப்போது பேசிய அமித் ஷா, "சத்தீஸ்கர் காவல்துறை மற்றும் பிற பாதுகாப்புப் படைகள் நக்சலிசத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, கடந்த ஓராண்டில் நக்ஸல்களுக்கு அதிகபட்ச சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. இது மிகப்பெரிய வெற்றியாகும்.

வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளின் மூலம் நக்சலைட்டுகளின் மன உறுதியை உடைத்ததோடு, சிவில் உரிமைகள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சிறப்புத் தொகுப்புகள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களை பிரதான நீரோட்டத்தில் மோடி அரசு சேர்க்கிறது. வரும் நாட்களில் சத்தீஸ்கர் நக்சலிசத்தில் இருந்து முற்றிலும் விடுபட்டு வளர்ச்சிப் பணிகளில் நாட்டின் முன்னணி மாநிலமாக மாறப்போகிறது.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்கும் இலக்கை அடைய அனைத்து படைகள் மற்றும் ஏஜென்சிகளும் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த முயற்சியில் தேசிய புலனாய்வு முகமை மிக முக்கிய பங்கு வகிக்கும்" என்று ஷா கூறினார்.

முன்னதாக, பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள பாதுகாப்புப் படைகளின் தளத்தை அவர் பார்வையிட்டார். மேலும், பாதுகாப்புப் படைகளின் செயல்பாட்டுத் தயார் நிலையையும் அவர் ஆய்வு செய்தார்.

சத்தீஸ்கரில் நக்ஸல் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பணிகளில் CRPF, ITBP, BSF, சத்தீஸ்கர் போலீஸ் மற்றும் மாவட்ட ரிசர்வ் காவலர் (DRG) ஆகிய படைகள் இணைந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

## ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் குறித்து அவதூறு ஸ்ரீரங்கம் ரங்கராஜன் டிச.24 வரை சிறையில் அடைப்பு

சென்னை



ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பியதாக கைது செய்யப்பட்ட ஸ்ரீரங்கம் ரங்கராஜன் வரும் 24ம் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது: திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்தவர் ரங்கராஜன் நரசிம்மன். இவர் அவரது கருத்துகளை முன்வைத்து வீடியோ வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார். அந்த வகையில் கடந்த வாரம் யூடியூப் சேனலில் வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகள் குறித்து விமர்சித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, உண்மைக்கு புறம்பாக தன்னைப் பற்றி அவதூறாக திரித்து புனையப்பட்ட உரையாடலை சமூக வலைதளத்தில் பதிவிட்ட ஸ்ரீரங்கம் ரங்கராஜன் மீது நடவடிக்கை எடுக்குமாறு சென்னை காவல் ஆணையர் அலுவலகத்துக்கு ஆன்லைன் வாயிலாக ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகள் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது. காவல் ஆணையர் அருண் உத்தரவின் பேரில், மத்திய குற்றப்பிரிவு சைபர் க்ரைம் போலீஸார் இதுகுறித்து விசாரித்தனர்.

இதையடுத்து, புகாருக்குள்ளான ஸ்ரீரங்கம் ரங்கராஜன் மீது 5 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து, நேற்று முன்தினம் ஸ்ரீரங்கத்தில் உள்ள அவரது வீட்டில் ரங்கராஜனை சென்னை சைபர் க்ரைம் போலீஸார் கைது செய்தனர். பின்னர் அவரை சென்னை அழைத்து வந்து விசாரித்தனர். இதன் தொடர்ச்சியாக ஸ்ரீரங்கம் ரங்கராஜனை எழும்பூர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தினர்.

அவரை வரும் 24ம் தேதி வரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டார். இதுஒருபுறம் இருக்க ஸ்ரீரங்கம் ரங்கராஜன் வீட்டில் சைபர் க்ரைம் போலீஸார் நேற்று சோதனை மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## "தமிழக எல்லையோர மாவட்டங்களில் கேரள மருத்துவக் கழிவுகள்" அரசுக்கு அண்ணாமலை எச்சரிக்கை

சென்னை, டிச.18



"கேரள கம்யூனிஸ்ட் அரசுடன் திமுக அரசு உறவாடிக் கொண்டிருக்கும் அதே வேளையில், கேரள மாநிலத்தின் பயோ மெடிக்கல், பிளாஸ்டிக் மற்றும் இறைச்சிக் கழிவுகளின் குப்பைக் கிடங்காக நமது தென்மாவட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இனியும் இதே போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால், வரும் 2025 ஜனவரி முதல் வாரத்தில், பொது மக்களைத் திரட்டி, இந்த உயிரியல் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைகளை லாரிகளில் ஏற்றிச் சென்று, கேரளாவில் கொண்டு கொட்டுவோம். முதல் லாரியில் நானும் செல்வேன்." என்று பாஜகமாநிலத் தலைவர் அண்ணாமலை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "காவிரி நீர் உள்ளிட்ட தமிழகத்தின் உரிமைகளை தனது கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களை, கேரள கம்யூனிஸ்ட் அரசின் குப்பைக் கிடங்காக மாற்றவும் அனுமதித்திருக்கிறார்.

கேரள கம்யூனிஸ்ட் அரசுடன் திமுக அரசு உறவாடிக் கொண்டிருக்கும் அதே வேளையில், கேரள மாநிலத்தின் பயோ மெடிக்கல், பிளாஸ்டிக் மற்றும் இறைச்சிக் கழிவுகளின் குப்பைக் கிடங்காக நமது தென் மாவட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. தினம் தினம் லாரிகளில் கொண்டு வந்து கொட்டப்படும் இந்தக் கழிவுகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய சோதனைச் சாவடிகள், வெறும் வசூல் மையங்களாக மட்டுமே மாறிவிட்டன.

ஒருபுறம் தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்து கேரள மாநிலத்துக்குச் சட்டவிரோதமாக கனிமங்கள் கடத்தப்படுவதைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் திமுக அரசு, மறுபுறம் தமிழகத்தை குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத்திக்கொள்ள சுதந்திரமான அனுமதி அளித்துள்ளது. அதிகாரிகளிடமும், முதல்வர் தனிப்பிரிவுக்கும் பலமுறை புகார் அளித்தும், இதனைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. முழுக்க முழுக்க திமுக அரசுக்குத் தெரிந்தே இவை நடைபெறுகின்றன.

உடனடியாக, கேரள மாநிலத்தின் குப்பைக் கிடங்காக தமிழக எல்லையோர மாவட்டங்கள் மாற்றப்படுவதைத் திமுக அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இனியும் இதே போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால், வரும் 2025 ஜனவரி முதல் வாரத்தில், பொதுமக்களைத் திரட்டி, இந்த உயிரியல் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைகளை லாரிகளில் ஏற்றிச் சென்று, கேரளாவில் கொண்டு கொட்டுவோம். முதல் லாரியில் நானும் செல்வேன் என்பதைத் திமுக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று அவர் கூறியுள்ளார்.

## '2026 தேர்தலுக்குப் பிறகு பாஜகவை ஆதரிக்க திமுக தயாராகிவிட்டது'
### கே.என்.நேருவுக்கு ஜெயக்குமார் பதிலடி

சென்னை , டிச.18



"2026க்குப் பிறகு திமுகவின் முழு ஆதரவை பாஜகவுக்கு அளித்து மத்திய அமைச்சர் பொறுப்புகளை பெற திமுக தயாராகிவிட்டது." என்று அதிமுக முன் னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு தெனாலியை விட பயப்பட்டியல் நீள்கிறது, என்று அமைச்சர் கே.என். நேரு கூறியிருப்பது தொடர்பான கேள்விக்கு, அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பதிலில், "திமுகவின் அறிக்கையில் உள்ள அனைத்துக்கும் பொருந்தக்கூடிய ஒரு கட்சி என்றால் அது திமுகதான். கடந்தகால அரசியல் வரலாற்றைப் பார்க்க வேண்டும்.

பாஜகவுடன் 5 வருடம், முழுமையாக அந்த ஆட்சியினுடைய சுவையை அனுபவித்த திமுக அதன்பிறகு, அவர்களை கழற்றி விட்டனர். 1998ல் மறைந்த முதல்வர் ஜெயலலிதா பாஜகவுடன் கூட்டணி வைத்தார். ஆனால், காவிரி நதி நீர் பிரச்சினையில், ஒரு 205 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடும் பிரச்சினையில், நமது உரிமைக்கான பிரச்சினைக்கு மத்திய அரசு அன்று செவிசாய்க்காத சூழலில் அதிமுக பாஜகவுக்கு அளித்த வந்த ஆதரவை ஜெயலலிதா வாபஸ் பெற்றார். அதனால் வாஜ்பாய் தலைமையிலான அரசு கவிழ்ந்தது.

அதற்கு முன்புவரை, மறைந்த முதல்வர் கருணாநிதி பாஜக ஒரு மதவாத சக்தி, எந்தக் காலத்திலும் அந்த கட்சியுடன் கூட்டணி இல்லை என்று கூறிவந்தார். 3 மாதங்களாக கூறி வந்தவர், பாஜக கூட்டணியில் இருந்து அதிமுக வெளியேறியதும், பாஜகவுடன் கூட்டணி அமைத்து திமுக ஆட்சி சுகத்தை முழுமையாக அனுபவித்தது. திமுகவைப் பொறுத்தவரை எப்போதுமே இரட்டை வேடமிடும் கட்சி. சந்தர்ப்பவாத, பச்சோந்தித்தனமான அரசியல் செய்வதில் திமுகவினர் கில்லாடி. பதவிக்காக எது வேண்டுமானாலும் செய்பவர்கள். எந்தளவுக்கு வேண்டும் என்றாலும் இறங்கிச் செல்வார்கள்.

ஒரு அமைச்சரை பிரதமர் சந்தித்த வரலாறு உண்டா? தற் போது துணை முதல்வராக இருக்கும் உதயநிதி, பிரதமரைச் சந்திக்க நேரம் கேட்கிறார். உடனடியாக பிரதமர் மோடியைச் சந்திக்க உதயநிதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. எந்த மாநில அமைச்சர் பிரதமரை சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது? பின்னர் முதல்வர் ஸ்டாலின் சென்று பிரதமர் மோடியைச் சந்தித்தார். திமுக பாஜக இடையே எழுதப்படாத ஒப்பந்தம் இருக்கிறது. 2026க்காக காத்திருக்கிறார்கள். எம்.பிக்களானவர்கள் மத்திய அமைச்சர் பதவியில் இல்லை என்ற அதிகாரப்பசி திமுகவுக்கு வந்துவிட்டது. எனவே, திமுக பாஜகவுடன் சென்று ஐக்கியமாகிவிடும்.

2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக ஜெயிக்கப்போவது இல்லை. அது வேறு விஷயம். ஆனால், 2026க்குப் பிறகு திமுகவின் முழு ஆதரவைபாஜகவுக்கு அளித்து மத்திய அமைச்சர் பொறுப்புகளை பெறவும் திமுக தயாராகிவிட்டது. கார்ப்பரேட் அரசாங்கத்தை நடத்தி வரும் பிரதமர் மோடிக்கு, நிதீஷ் குமாரையும், சந்திரபாபு நாயுடுவையும் மிரட்டுவதற்கு, திமுகவை ஆயுதமாக வைத்துக் கொள்வதற்கு இது வசதியாக இருக்கும்.

திமுக எந்த உறுதியான நிலைப் பாட்டிலும் இல்லை. நேரத்துக்கு ஏற்றது போல நிறத்தையும், கொள்கைகளையும் மாற்றிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பவாத கட்சி என்றால், அது திமுகதான். இதுதான் ஸ்டாலின் மாடல்." என்று கூறியுள்ளார்.

## தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு இலங்கை அதிபரிடம் வலியுறுத்த பிரதமருக்கு நவாஸ்கனி எம்.பி கடிதம்

புதுடெல்லி , டிச.18



இலங்கை அதிபர் மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். இவரிடம், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்த வேண்டும் என பிரதமர் நரேந்திர மோக்கு இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி எம்பி கே. நவாஸ்கனி கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாவது: இலங்கை அதிபர் திசாநாயக்க நம்முடைய நாட்டுக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்திருப்பதை அறிந்தேன். அவரிடம் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படும் தமிழ்நாடு மீனவர்கள் பிரச்சனை குறித்தும் முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையில் தமிழ்நாடு மீனவர்களுக்கு நேரும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படாமல் உள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது, கைது செய்து சிறையில் அடைக்கப்படுவது, அபராதம் விதிக்கப்படுவது என தொடர்கிறது. எனவே, இதற்கான நிரந்தர தீர்வை உடனடியாக காண வேண்டும்.

நிரந்தர தீர்வை காணும் வகையில் இருநாட்டு மீனவர்களுக்கு இடையான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்கிட வேண்டும். சுமுகமான முடிவு எட்டப்படவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்





மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மாநில அளவில் நடைபெற்ற பாரதியார் தின பூப்பந்து குழு விளையாட்டு போட்டிகளில் வெள்ளி பதக்கம் பெற்ற திரு.வி.க. மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மேயர் இந்திராணி பொன்வசந்த்தை சந்தித்து வாழ்த்துகளையும் பாராட்டும் பெற்றனர் அருகில் கல்வி அலுவலர் ரகுபதி, தலைமை ஆசிரியர் அன்புச்செல்வன் , உடற்கல்வி இயக்குநர் கபிலன், உடற்கல்வி ஆசிரியர் நரேஷ் ஆகியோர் உடன் உள்ளனர்.

# சிவகங்கை வட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம்

சிவகங்கை டிசம்18

அரசாணை (நிலை) எண்:22 நாள்: 29.01.2024ன் படி மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் ''உங்களைத் தேடி உங்கள் ஊரில்'' என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும்



தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, வருகின்ற 18.12.2024 அன்று சிவகங்கை வட்டத்தில் ''உங்களைத் தேடி உங்கள் ஊரில்'' திட்ட முகாம் நடைபெற உள்ளது.

மேலும், அன்றைய தினம் பிற்பகல் 04.30 மணி முதல் 06.00 மணி வரை பொதுமக்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் சிவகங்கை வட்டம், மதகுபட்டி பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள சந்திரசாமி திருமண மஹாலில் நடைபெற உள்ளது.

மேற்படி கலந்தாய்வு கூட்டத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, மாற்றுத்திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இந்நிகழ்வின்போது மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் சரவணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தார்.




மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார் அருகில் ஆணையாளர் ச.தினேஷ்குமார், துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி, உதவி ஆணையாளர் கோபு ஆகியோர் உடன் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் வாரச்சந்தையில் கல்லத்தி சேர்ந்த ராஜேஸ்வரி (65) என்பவர் நேற்று பொருட்கள் வாங்கிய கட்டப்பை மாற்றி எடுத்துச் சென்றுள்ளனர் .நெடுத்தாவு கிராமத்தைச் சேர்ந்த நித்தியா(30)கட்டபையை மாற்றி எடுத்துச் சென்றதாக காவல் நிலையத்தில் ஒப்படைத்தார். கட்ட பையில் 50,000 பணம் மற்றும் 02 பவுன் தங்கச் செயினை உரியவரிடம் காவல் ஆய்வாளர் முத்துப்பாண்டி ஒப்படைத்தார். நித்யாவின் நேர்மையை ஆய்வாளர் பாராட்டி பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தார்

# கல்லல் ஊராட்சி பகுதிகளில் ரூ.59.08 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பயன்பாட்டிற்கென திறந்து வைத்த அமைச்சர்

கல்லல் டிச18

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்து தெரிவிக்கையில்,





முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில், தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்துத்துறைகளின் மேம்பாட்டிற்கென பல்வேறு நடவடிக்கைகளை துரித மாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், ஜனநாயகத்தின் ஆணிவேராக திகழ்கின்ற கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, நகரங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் அனைத்து மேம்பாட்டு வசதிகளையும் மேம்படுத்திடும் பொருட்டு, அதற்கான நடவடிக்கைகள் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

மேலும், கிராமங்களில் வசித்து வரும் பொதுமக்கள் கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதை தவிர்த்திடும் பொருட்டு, அனைத்து கிராமப் புறங்களிலும், நகரங்களுக்கு இணையான வசதிகளை பெற்றிடும் வகையில் மின் இணைப்புகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள் ஆகியவற்றினை மேம்படுத்திட சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் சார்பிலும் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மூலமாகவும், சிறப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகம் முழுவதும் மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில் அனைத்து கட்டமைப்புகள் நிரம்பப்பெற்ற மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் 50 ஆண்டுகள் முன்னோக்கி செல்கின்ற வகையில் திட்ட செயல்பாடுகள் அடிப்படையாக அமைந்துள்ளது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

அந்தவகையில், தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டு வரும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பள்ளிகளுக்கு கண்டரமாணிக்கம் வளர்ச்சிக் குழுவின் சார்பில், நன்கொடையாளர்களான சண்முகம் ராஜமாணிக்கம் அவர்கள் மற்றும் திரு.சண்முகம் ராஜரத்தினம் ஆகியோர்களின் பங்களிப்புடன் தலா ரூ. 2,00,000/ வீதம் மொத்தம் ரூ.66,00,000/ மதிப்பீட்டிலான 33 மெய்நிகர் போர்டுகள் (Smart Board) கல்லல், தளக்காவூர், ஆற்காடு வெளுவூர், ஆலங்குடி, இளங்குடி, கம்பனூர், கே.ஆத்தங்குடி, செம்ப னூர், ஆ.கருங்குளம், வெளியாத்தூர், தட்டட்டி, என்.மேலையூர், என்.கீழையூர், மேலப்பட்டமங்கலம், கீழப்பட்டமங்கலம், கள்ளிப்பட்டு, கண்டரமாணிக்கம், கள்ளிப்பட்டு, என்.வைரவன்பட்டி, பலவான்குடி, பாதரக்குடி, செவரக்கோட்டை ஆகிய ஊராட்சிகளைச் சார்ந்த தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு உறுதுணையாக இருந்த கண்டமாணிக்கம் மணிகண்டனுக்கும் நன்றியினை இந்நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கண்டவாறு நாமே திட்டம் 202324ன் கீழ் ரூ.02.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ள 33 மெய்நிகர் போர்டுகளை (SmartBoard) கண்டரமாணிக்கம் ஊராட்சிக்குட்பட்ட வலையப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணாக்கர்களின் கற்றல் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிராவயல் ஊராட்சி, அதிகரம் கிராமம் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 202324ன் கீழ் ரூ.09.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்க கட்டிடம், கம்பனூர் ஊராட்சிக்குட்பட்ட தென்கரை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் 2021 22ன் கீழ் ரூ.14.59 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய உணவு தானிய கிட்டங்கி,

பாதரக்குடி ஊராட்சிக்குட்பட்ட பாதரக்குடி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் 2021 22ன் கீழ் ரூ.25.99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், செவரக்கோட்டை ஊராட்சி மரிங்கிப்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 202324ன் கீழ் ரூ.09.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கலைய ரங்க கட்டிடம் என ஆக மொத்தம் ரூ.59.08 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற 05 வளர்ச்சி திட்டப்பணிகள் இன்றையதினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து திட்டங்களின் பயன்களை, பொதுமக்கள் உரியமுறையில் பெற்று பயன்பெற வேண்டும். அதுவே அத்திட்டங்களின் வெற்றிக்கு அடிப்படையானதாகும்.

எனவே, தனிநபர் மற்றும் கிராமங்களின் மேம்பாட்டு வளர்ச்சிக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களை பெறுவதற்கான உரிய வழிமுறைகள் குறித்தும், முதலில் அறிந்து கொண்டு, அதன்மூலம் பயன்பெற்று தங்களது வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, கல்லல் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சொர்ணம் அசோகன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் மஞ்சரிலெட்சுமணன், ஊராட்சி மன்றத்தலைவர்கள் ராமு (கண்டரமாணிக்கம்), சரோஜா தேவி (சிராவயல்), அமுதா (கம்பனூர்), சுப்பிரமணியன் (செவரக்கோட்டை), ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மா.முத்தழகு, கு.உஷாராணி, மு.சங்கீதா, மாவட்ட கல்வி அலுவலர் மாரிமுத்து, கல்லல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரத்தினவேல், மகாலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பம்மல் வியாபாரிகள் சங்கத்தின் 46 வது ஆண்டு குடும்ப விழா

பல்லாவரம் டிச18

பம்மல் வியாபாரிகள் சங்கத்தின் 46வது ஆண்டு நடைபெற்ற குடும்ப விழாவில் சுதேசி மற்றும் உள்நாட்டு வணிகத்தை பொதுமக்கள் ஆதரிக்க வேண்டும் என தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் மாநில தலைவர் டைமண்ட்ராஜா வெள்ளையன் தெரிவித்தார்.




செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தனியார் மண்டபத்தில் பமமல் வியாபாரிகள் சங்கத்தின் 46 வது குடும்ப ஆண்டு விழா த.வெள்ளையன் பட திறப்பு விழா செங்கல்பட்டு மாவட்ட தலைவரும், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பம்மல் வியாபாரிகள் சங்க தலைவருமான இம்மானுவேல் ஜெயசீலன் தலைமையில் வெகு விமர்சையாக. நடைபெற்றது. இந்நிகச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் மாநில தலைவர் டைமண்ட்ராஜா வெள்ளையன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, 1வது மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், மாமன்ற உறுப்பினர் ஜெகந்நாதன் ஆகியோர் கலந்து கொண்டு வியாபாரிகள் நலன் குறித்து சிறப்புரையாற்றினர். பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பம்மல் 1வது மண்டல குழுத் தலைவர் பேசுகையில் பல்லாவரம் அனகாபுத்தூர் சாலைகள் அகல படுத்தும் பணி விரைவில் தொடங்கபடும் எனவும் அவ்வாறு பணிகள் நடைபெறும் போது வியாபாரிகள் ஒத்துழைப்பு தரவேண்டும் என கேட்டுகொண்டனர். இதனை தொடந்து பேசிய டைமண்ட்ராஜா வெள்ளையன் பேசுகையில் சுதேசி வணிகம் மற்றும் உள்நாட்டு வணிகத்தை பொதுமக்கள் ஆதரிக்க வேண்டும் என தெரிவித்தார், இவ்விழாவில் பொதுச் செயலாளர் பாலசேகர், பொருளாளர் ரமேஷ், செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் உமாபதி, பொருளாளர் கார்த்திக், ரமேஷ் உட்பட அனைத்து மாநில மாவட்ட தொகுதி மற்றும் செயல் ஆலோசகர்கள் வணிக நிர்வாகிகள் சங்க உறுப்பினர்கள் குடும்பத்துடன். ஏராளமானோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் இறுதியாக அனைவருக்கும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப் பட்டது.

# திண்டுக்கல் மாவட்டத்தில் ''கலைஞர் கைவினைத் திட்டம்'' மூலம் கடனுதவி பெற கைவினை கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல் டிச.16

தமிழ்நாடு அரசால் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கைவினை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், கைவினை கலைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கிடும் நோக்கத்துடனும் ''கலைஞர் கைவினைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அரசு ஆணை எண். 64, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை, நாள்: 06.12.2024இல் வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தில் கைவினை கலைஞர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவியும் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்படும் என மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



கலைஞர் கைவினைத் திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.50,000 வரை 25 சதவீதம் மானியத்துடன் ரூ.3,00,000 வரை வங்கி கடன் உதவியும், 5 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும். இத்திட்டத்தில் விண்ணப்பிக்க 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். கைவினைத் தொழில் மற்றும் கைவினைக் கலைகளில் ஈடுபட்டு வரும் மக்கள் பயனடையும் வகையில், புதிய தொழில் தொடங்கவும், செய்யும் தொழிலை விரிவாக்கம் செய்திடவும் கடனுதவி வழங்கப்படும்.

கட்டட வேலைகள், மர வேலைப்பாடுகள், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், தோல் கைவினைபொருட்கள், காலணிகள் தயாரித்தல், மீன் வலை தயாரித்தல், நகை செய்தல், சிகையலங்காரம், அழகுக்கலை, துணி நெய்தல், துணிகளில் கலை வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல், தையல் வேலை, கூடை பின்னுதல், கயிறு, பாய் பின்னுதல், துடைப்பான் செய்தல், மண் பாண்டங்கள் சுடு மண் வேலைகள், பொம்மை தயாரித்தல், படகுக் கட்டுமானம், துணி வெளுத்தல், சிற்ப வேலைப்பாடுகள், கற்சிலை வடித்தல், ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், கண்ணாடி வேலைப்பாடுகள், பாரம்பரிய இசைக்கருவிகள் தயாரித்தல், மலர் வேலைப்பாடுகள், உலோக வேலைப்பாடுகள், பாசிமணி வேலைப்பாடுகள், பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள், கைவினைப் பொருட்கள், மூங்கில், பிரம்பு, சணல், பனை ஓலை வேலைப்பாடுகள் போன்ற 25 வகையான கைவினைத் தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க தகுதியுடைய தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற www.msmeonline.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மேற்காணும் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இதுதொடர்பான மேலும் விவரங்களுக்கு, ''பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, திண்டுக்கல்'' என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 04512471609, கைப்பேசி எண் 8925533943 ஆகிய எண்கள் வாயிலாகவோ சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம், என மாவட்ட ஆட்சித் தலைவர் மொ.நா.பூங்கொடி, இ தெரிவித்துள்ளார்.



தேனி மாவட்ட ஆட்சியரகத்தில், 10ஆவது ASIA PACIFIC DEAF GAMES மாற்றுத்திறனாளி காதுகேளாதோர் பிரிவில் சர்வதேச அளவில் கோலாலம்பூர், மலேசியாவில் நடைபெற்ற தடகள போட்டிகளில் 5 பதக்கங்கள் பெற்ற செல்வி பிரியங்கா அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா புத்தகம் வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

## தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்புமுகாம்

தூத்துக்குடி, டிச.18

வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் பிரதி மாதம் இரண்டாவது அல்லது மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது . டிசம்பர மாதத்திற்கான சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 20.12.2024 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணி அளவில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோரம்பள்ளம், தூத்துக்குடியில் வைத்து நடைபெற உள்ளது.

இம்முகாமில் வேலையளிக்கும் தனியார் நிறுவன பிரதிநிதிகள் கலந்துகொண்டு தங்கள் நிறுவனத்திற்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்து கொள்ளலாம் எனவும், பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, பட்டப்படிப்பு, டிரைவர் மற்றும் கணினி பயிற்சி கல்வித்தகுதியுடைய பதிவுதாரர்கள் கலந்துகொள் ளலாம் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

மேற்கண்ட தகுதியுள்ள, தனியார்துறையில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் தங்களது பயோடேட்டா மற்றும் கல்விச் சான்றிதழ்களுடன் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் வேலைநாடுநர்கள் தனியார்துறை நிறுவனங்களில் பணிநியமனம் செய்யப்படும் நேர்வில் வேலைவாய்ப்பு அலுவலக பதிவுமூப்பு ரத்து ஆகாது.

இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலையளிப்போர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் முகாம் தொடர்பான பல்வேறு தகவல்களை பெற இவ்வலுவலக தொலைபேசி எண்.0461 2340159ஐ தொடர்பு கொண்டும் பயன்பெறலாம் என தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் க. இளம்பகவத், தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பச்சளநாயக்கன்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்டத்தில் உள்ள 04 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் (16 நபர்கள்), 02 அரசு பாலிடெக்னிக் கல்லூரி (20 நபர்கள்) களில் பணிபுரியும் தொழில்நுட்ப பயிற்சியாளர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தெ ... பர்கள்)களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தும் விதமாக ... டாயோட்டா டெக்னிக்கல் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் திற ... ற்காக செல்லும் 45 நபர்களின் தொழிற்சாலைப் பயணத்தை (In ... ஆட்சித் தலைவர்க.இளம்பகவத் கொடியசைத்து தொடங்கி வைத் ... வி இயக்குநர் (திறன் மேம்பாடு) ஏஞ்சல் விஜயநிர்மலா, பொது ... மையம்) ஸ்வர்ணலதா, துணை ஆட்சியர் (பயிற்சி) சத்யா உட் ... டனிருந்தனர்.



## தாமிரபரணி கூட்டுக் ... தி வழங்க வேண்டும் நகராட்சி நிர்வாக இயக்குனரிடம் நகர்மன்ற தலைவர் கோரிக்கை

தென்காசி, டிச.18

தென்காசியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் பலத்த மழையினால் சேதம் அடைந்துள்ள தென்காசி நகராட்சி பகுதியை நகராட்சி நிர்வாக இயக்குனர் எஸ்.சிவராசு ஐஏஎஸ் நேரில் பார்வையிட்டு செய்தார். தென்காசி மாவட்டத்தில் பெய்த பலத்த மழையின் காரணமாக தென்காசி நகராட்சி பகுதியில் சேதம் அடைந்துள்ள பகுதிகளை ஆய்வு செய்யும் நிகழ்ச்சிக்கு தென்காசி நகர் மன்றத் தலைவர் ஆர்.சாதிர் தலைமை தாங்கினார். நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் முன்னிலையில் நகராட்சி நிர்வாக இயக்குனர் எஸ். சிவராசு ஐஏஎஸ், தென்காசி நகராட்சி பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களையும் மழை வெள்ளத்தால் சேதமடைந்த நவீன எரிவாயு தகன மேடை மற்றும் மழையால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் பொது மக்களையும் சந்தித்தார்.



மேலும் தென்காசி நகரப் பகுதி மக்களுக்கு நீண்டநாள் தேவையான தாமிரபரணி கூட்டுகுடிநீர் திட்டத்திற்கான சுமார் 107 கோடி மதிப்பீட்டிலான மேல்நிலை நீர்தேக்கதொட்டி கட்டுவதற்கான தேவையான நிதியை ஒதுக்கி தருமாறு நகர்மன்றத் தலைவர் ஆர்.சாதிர் வலியுறுத்தினார். அதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர் விரைவில் நிறைவேற்றி தருவதாகவும் உறுதி அளித்தார். இந்நிகழ்வில் தென்காசி உள்ள நகர்மன்றத் தலைவர் ஆர்.சாதிர், நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், நகராட்சி பொறியாளர் ஹசீனா, சுகாதார அலுவலர் முகம்மது இஸ்மாயில், சுகாதார ஆய்வாளர்கள் கணேசன், ஈஸ்வரன், நகர் மன்ற. உறுப்பினர் சுமதி இசக்கிரவி, துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் சுப்பிரமணியன், துரைசாமி, முத்துக்குமார், முத்து மாரியப்பன், திமுக நிர்வாகிகள், நகரப் பொருளாளர் ஷேக் பரீத், மாவட்ட பொறியாளர் அணி தலைவர் தங்கபாண்டியன், வட்டக் கழகச் செயலாளர் சண்முகநாதன், அறங்காவலர் இசக்கி ரவி, மாணவரணி மைதீன்,ராஜன் இளைஞரணி முரளி, மற்றும் தன்னார்வலர்கள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## சிவகங்கை அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான திருக்குறள் வினாடி வினா முதல் நிலை போட்டி

சிவகங்கை, டிச.18

குமரி முனையில் வானுயர்ந்து நிற்கும் ஐயன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவை முன்னிட்டு, மாநில அளவிலான திருக்குறள் வினாடி வினா போட்டியானது தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், விருது நகர் மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்பில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக நடைபெறவுள்ளது.

அதன்படி, மாநில அளவிலான திருக்குறள் வினாடி வினா போட்டியின் முதல் நிலைப் போட்டியானது, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் வகையில், அந்தந்த மாவட்டங்களில் வருகின்ற 21.12.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில், அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து துறை / அனைத்து நிலை அலுவலர்கள், அரசு / அரசு உதவி பெறும், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வகை தனியார் பள்ளிகள் / கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் பங்கேற்க விருக்கும் திருக்குறள் முதல் நிலை வினாடி வினா போட்டியானது, வருகின்ற 21.12.2024 அன்று பிற்பகல் 2:00 மணியளவில் சிவகங்கை



மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாக கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது. மேலும், போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் நாளன்று பிற்பகல் 01:00 மணியளவில் போட்டி நடைபெறும் இடத்திற்கு வருகை புரிந்திருத்தல் வேண்டும்.

எனவே, திருக்குறள் வினாடி வினா போட்டியில் பங்கேற்க விரும்பும், அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து துறை / அனைத்து நிலை அலுவலர்கள், அரசு /அரசு உதவி பெறும், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வகைதனியார் பள்ளிகள் / கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரிய பெருமக்கள் ஆகியோர் வருகின்ற 20.12.2024 அன்று மாலை 05.00 மணிக்குள் https://shorturl.at/WUo6h என்ற இணையதள முகவரியின் வாயிலாகவோ அல்லது குறிப்பிட்டுள்ள னிஸி நீஷீபீமீ ஐப் பயன்படுத்தி முன்பதிவு செய்து, திருக்குறள் வினாடி வினா போட்டியில் பங்கேற்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

## தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அரசு கலை அறிவியல் கல்லூரியில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்

தேனி டிச.18

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சயர் ஆர்.வி.ஷஜீவனா, தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது,

தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் பதிவு புதுப்பித்தல், பரிந்துரை, வேலைவாய்ப்பு இல்லாதோர் உதவித் தொகை வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகைப் பணிகள், வேலை நிலவர தகவல் பணிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.



மேலும், வேலைவாய்ப்பு மையத்தில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டம் மூலம் ஒன்றிய அரசு/ மாநிலஅரசு /ரயில்வே தேர்வு வாரியம்/ வங்கிப்பணியாளர் தேர்வு வாரியம் உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு மாதிரி தேர்வு மற்றும் மாதிரி நேர்காணல்கள் நடத்தப் பட்டு வருகிறது. போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறையும் உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரால் 2022ஆம் ஆண்டு கல்வி தொலைக்காட்சியில் போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் துவக்கப்பட்டது. மேலும் ஊக்க உரைகள், முந்தைய ஆண்டு வினாத்தாள்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மற்றும் நடப்பு நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

மேலும், தனியார் துறை யில் வேலை தேடும் இளைஞர்களுக்காக சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் கலந்துகொள்ளும் வேலைதேடும் இளைஞர்கள் தங்கள் கல்வித்தகுதி மற்றும் திறமைக்கேற்ப வேலை வாய்ப்புகளை வெளிநாடுகளிலும் பெற முடியும்.

இன்றைய காலக்கட்டங்களில் இளைஞர்கள் அரசு வேலையை மட்டும் எதிர்பார்க்காமல், தொழில்முனைவோராக உருவாக தேவையான அனைத்துப் பயிற்சிகளும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை தங்களுக்கு ஏற்ப அமைத்துக்கொள்ள வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது. அதனை சிறந்த முறையில் பயன்படுத்தி முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

முன்னதாக, கருத்தரங்கில் சமுதாய முன்னேற்றத்தில் எனது பங்களிப்பு என்ற தலைப்பில் கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் பேட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும், சென்னையில் நடை பெற்ற மாநில அளவிலான கட்டுரைப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற மாணவிக்கு பாராட்டுகளையும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய கையேட்டினை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா தேவி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ராமபிரபா, துணை ஆட்சியர் (பயிற்சி) கே.டினு அரவிந்த், கல்லூரி முதல்வர் த.சுஜாதா மற்றும் மாணவ, மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்ட அளவிலான திருக்குறள் தொடர்பான பல்வேறு போட்டிகள் மாவட்ட ஆட்சியர் தகவல்

தேனி டிச18

தேனி மாவட்டத்தில்கன்னியாகுமரியில் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை 01.01.2000 அன்று முத்தமிழறிஞர் கலைஞரால் நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் அதற்கான வெள்ளிவிழாவினை கொண்டாடுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கடந்த 12 ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ/மாணவியர்கள் பங்கேற்கும் திருக்குறள் தொடர்பான பல்வேறு போட்டிகள் மாவட்ட மைய நூலகத்தில் வருகின்ற 23.12.2024 முதல் 31.12.2024 வரை நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

மேலும், தேனி மாவட்ட மைய நூலகத்தில் திருக்குறள் விளக்க உரைகளையும், திருக்குறள் தொடர்பான புகைப் படங்களையும், புகைப்படக் கண்காட்சியாக வைத்தல், கருத்தரங்கம், மாணவ மாணவிகளுக்கான திருக்குறள் ஒப்புவித்தல், வினாடிவினா, பேச்சுப் போட்டி மற்றும் அரசு ஊழியர்களுக்கான வினாடி வினா போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

மாணவர்களுக்கான திருக்குறள் ஒப்புவித்தல், வினாடி வினா மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.5000, இரண்டாம் பரிசாக ரூ.3000, மூன்றாம் பரிசாக ரூ.2000 ரொக்கமாக வழங்கப்படும். போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைவருக்கும்




பங்கேற்பு சான்றிதழ் வழங்கப் படும்.. இந்த அறிய வாய்ப்பினை மாணவ மாணவியர்கள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 16.12.2024 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் பள்ளிக்கல்வித்துறை, மாவட்ட வேலைவாய்ப்புத்துறை, தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் மாவட்ட மைய நூலக அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. அதனடிப்படையில், அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு திருக்குறள் முற்றோதல் போட்டியும், அரசு அலுவலர்களுக்கு திருக்குறள் வினாடி வினா போட்டியும் 24.12.2024 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ/மாணவியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது விபரங்களை dlothn1997@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 21.12.2024 பிற்பகல் 5 மணிக்குள் அனுப்பி வைக்கவும், மேலும் இதுதொடர்பான தகவல்களுக்கு 9486001677,8838457789 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ஆர்.வி. ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

## இன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் விளாத்திகுளம் வட்டத்தில் சிறப்பு முகாம்

தூத்துக்குடி, டிச.18

தமிழ்நாடு முதலமைச்சர் மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக் குடன் தீர்வு காண அரசு இயந் திரம் களத்திற்கே வந்து செயலாற்றும் வகையில் அறிவித்துள்ள 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்'' என்ற திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் விளாத்திகுளம் வட்டத்தில் 18.12.2024 அன்று தங்கி முகாமிட்டு விளாத்திகுளம் வட்டத்திலுள்ள அனைத்துத்துறை அலுவலகங்கள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து கள ஆய்வு செய்ய உள்ளார்கள். அன்றைய தினம் மதியம் 2.30 முதல் 4.30 வரை அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வு நடத்தி முற்பகலில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட கள பயணங்கள், அலுவலக ஆய்வுகள் குறித்து கேட்டறிவார்கள். அதன் பின் மாவட்ட ஆட்சித் தலைவர் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை விளாத்திகுளம்; வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாலை 04.30 மணி முதல் மாலை 06.00 மணி வரை பெற்றுக் கொள்வார். மீண்டும் நகர்ப்புறம், கிராம ஊராட்சிகள் பகுதிகளுக்குச் சென்று பல்வேறு அரசு துறைகளின் சேவை வழங்குதல், திட்ட செயல்பாடுகள் குறித்து மதிப்பாய்வு செய்ய உள்ளார் கள். அன்றைய இரவு அவ்வட்டத்திலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்; மற்றும் அனைத்து அலுவலர்களும் தங்கி மறு நாளான 19.12.2024 அன்று அதிகாலை அடிப்படை வசதிகளான குடிநீர், சுகாதாரம், தூய்மை, போக்குவரத்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்றவற்றை ஆய்வு செய்ய உள்ளனர்.

மக்கள் இருப்பிடம் தேடி சேவை அளிக்கும் வகையிலும் கள ஆய்வின் போது கண்டறியப்பட்ட அவ்வட்ட மக்களின் தேவைகள் குறித்த முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பிவைத்திடும் வகையிலும் உருவாக்கம் செய்யப்பட்டுள்ள 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்'' திட்ட முகாமின் போது பொதுமக்கள், தங்கள் வாழ்விட முன்னேற்றத்திற்கு தேவையான கருத்துக்களையும், கோரிக்கை மனுக்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கிடலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மாலை தந்தி 18.12.2024

## அலங்காநல்லூர் அமமுக சார்பில் குழந்தைகள் காப்பகத்தில் அன்னதானம்

அலங்காநல்லூர், டிச.18

அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் பிறந்தநாளையொட்டி மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள சின்னஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள குழந்தைகள் காப்பகத்தில் ஒன்றிய செயலாளர் வக்கீல் கோடீஸ்வரன் தலைமையில் மாநில அம்மா பேரவை செயலாளரும், மாவட்ட செயலாளருமான டேவிட் அண்ணாதுரை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கேக் வெட்டி குழந்தைகளுக்கு வழங்கி அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.





இந்த நிகழ்ச்சிகள் மேற்கு ஒன்றிய செயலாளர் ரகு, வடக்கு ஒன்றிய செயலாளர் ஜெய்பாண்டி, மாவட்ட இலக்கிய அணி நீதி, நகர் செயளாலர் ராஜபிரபு, முருகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக பிரசித்தி பெற்ற முனியாண்டி சுவாமி திருக்கோவிலில் சிறப்பு பூஜை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

இந்நிகழ்வில் அவைதலைவர் செல்வம், ஒன்றிய இணை செயலாளர் சண்முகசுந்தரம், நிர்வாகிகள் வேல்முருகன், கல்லணை சந்திரசேகர், மோகன், கோவிலூர் செந்தில், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாநகராட்சி பகுதிகளில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த கனமழையின் காரணமாக பல இடங்களில் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டது. இந்நிலையில் மழைக்கால நோய்களிலிருந்து தடுப்பதற்காக நெல்லை டவுன் சந்திப்பிள்ளையார் கோவில் தெருவில் வைத்து நெல்லை மேயர் ராமகிருஷ்ணன் பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயத்தை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் ஏராளாமான பொது மக்கள் கலந்து கொண்டு நிலவேம்பு கசாயம் அருந்தினர்.

## ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக முழு கொள்ளளவை எட்டி மறுகால் பாய்ந்த சாத்தியார் அணை விவசாயிகள் மகிழ்ச்சி

அலங்காநல்லூர், டிச.18

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ளது சாத்தியார் அணை 29 அடி கொள்ளளவு கொண்டதாகும். மதுரை மாவட்டத்தில் உள்ள ஒரே அணை இதுவாகும். தற்போது பெய்துவரும் வடகிழக்கு பருவமழை, தொடர் கனமழை காரணமாக அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளான திண்டுக்கல், சிறுமலை, செம்பட்டி கரடு, உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் இருந்து அதிகளவில் அணைக்கு தண்ணீர் வந்து கொண்டு இருப்பதால் தற்போது அணை முழு கொள்ளளவை எட்டி மறுகால் பாய்ந்து வருகிறது. ஏற்கனவே கடந்த அக்டோபர் மாதம் பெய்த கனமழையால் அணை முழுவதுமாக நிரம்பி பாசன வசதிக்காக அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக அணை நிரம்பி மறுகால் பாய்ந்து வருவதால் இந்த அணை மூலம் பாசன வசதி பெறும் 11 கிராம பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து அணை முழுவதுமாக நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. இதனால் இப்பகுதி பாசன வசதி பெறும் சுமார் 2 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் மூலம் இப்பகுதியில் இன்னும் ஓரிரு ஆண்டுகளுக்கு மானாவாரி பயிர் செய்ய தேவையான ஈரப்பதம் இருக்கும் என்பதாலும் விவசாயம் செய்ய தேவையான நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்பதாலும் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது இப்பகுதியில் கரும்பு மற்றும் தானிய பயிர்கள் மட்டுமே விவசாயம் செய்து வந்த நிலையில் தொடர்ந்து அணை நிரம்பி மறுகால் பாய்ந்து வருவதால் இப்பகுதியில் கடந்த 15 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் நெல் நடவு பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் ஓரிரு தினங்களில் மீண்டும் அணையில் இருந்து பாசன வசதிக்காக தண்ணீர் திறந்து விடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈரோட்டில் பெண்களின் பாதுகாப்பு குறித்து மாநில அளவிலான கருத்தரங்கம்

ஈரோடு, டிச.18

கிராமிய பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் ஸிகீஞ்ஜி சார்பாக பணியிடங்களில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு குறித்து மாநில அளவிலான கருத்தரங்கம் சேலம் சிவில் இன்ஜினியர் அசோசியேஷன் ஹாலில் *RWDT நிறுவன இயக்குனர் வி.அலமேலு தலைமையில் நடைபெற்றது. கவிதா, வரவேற்றார். இதில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவர் ஏ.எஸ்.குமாரி, கலந்து கொண்டு பெண் தொழிலாளர்கள் மத்தியில், பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பு குறித்தும், மகளிர் உரிமை குறித்தும், தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்களுக்கு உள்ள பாதுகாப்பு, சுகாதாரம், வளர்ச்சி, குறித்து பல்வேறு விளக்கங்களை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் சேலம் மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா கலந்து கொண்டு பெண் தொழிலாளர்கள் மத்தியில் குழந்தை திருமணங்கள் குறித்தும், பல்வேறு பெண்கள் சார்ந்த நலத்திட்டங்கள் குறித்தும் உரிய விளக்கம் அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இதில் தொழிற்சாலைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குனர். சீனிவாசன், மாவட்ட வழக்கறிஞர் திருமதி திவ்யா, தொனி பவுண்டேஷன். ஜெயபால், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இந்நிகழ்வில் கிஷியிதி சினிளி. ஙி.பண்ணன் முன்னிலையில் அருந்ததியர் மாணவர்களின் கல்வி நிலை குறித்த ஆய்வு புத்தகத்தை மாநில மகளிர் ஆணைய தலைவர், வெளியிட மாவட்ட சமூக நல அலுவலர் பெற்றுக் கொண்டார். இதில் ASJF தலைவர்களும் பெண் தொழிலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். க.இராதாகிருஷ்ணன். நன்றி உரையாற்றினார்.






## திண்டுக்கல் மாவட்டத்தில் “கலைஞர் கைவினைத் திட்டம்“ மூலம் கடனுதவி பெற கைவினை கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்! ஆட்சியர்

திண்டுக்கல் டிச.18

தமிழ்நாடு அரசால் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் கைவினை கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், கைவினை கலைஞர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்கிடும் நோக்கத்துடனும் “கலைஞர் கைவினைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அரசு ஆணை எண். 64, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை, நாள்: 06.12.2024இல் வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தில் கைவினை கலைஞர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் உதவியும் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கப்படும் என குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.50,000 வரை 25 சதவீதம் மானியத்துடன் ரூ.3,00,000 வரை வங்கி கடன் உதவியும், 5 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படும். இத்திட்டத்தில் விண்ணப்பிக்க 35 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும். கைவினைத் தொழில் மற்றும் கைவினைக் கலைகளில் ஈடுபட்டு வரும் மக்கள் பயனடையும் வகையில், புதிய தொழில் தொடங்கவும், செய்யும் தொழிலை விரிவாக்கம் செய்திடவும் கடனுதவி வழங்கப்படும்.

கட்டட வேலைகள், மர வேலைப்பாடுகள், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், தோல் கைவினைபொருட்கள், காலணிகள் தயாரித்தல், மீன் வலை தயாரித்தல், தையல் வேலை, கூடை பின்னு தல், கயிறு, பாய் பின்னுதல், துடைப்பான் செய்தல், மண் பாண்டங்கள் சுடு மண் வேலைகள், பொம்மை தயாரித்தல், படகுக் கட்டுமானம், துணி வெளுத்தல், சிற்ப வேலைப் பாடுகள் போன்ற 25 வகையான கைவினைத் தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க தகுதி யுடைய தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன் பெற www.msmeonline.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் விண்ணப்பிக்கலாம். திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள மேற்காணும் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்கள் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

இதுதொடர்பான மேலும் விவரங்களுக்கு, “பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சிட்கோ தொழிற்பேட்டை, திண்டுக்கல்“ என்ற முகவரியில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 04512471609, கைப்பேசி எண் 8925533943 ஆகிய எண்கள் வாயிலாகவோ சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்பு கொண்டுதெரிந்துகொள்ளலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, இ தெரிவித்துள்ளார்.

## ஆதனூரில் அம்பேத்கர் மாலை நேர படிப்பக கட்டிடத்தை கட்ட அனுமதி மறுக்கும் வருவாய்த்துறை கண்டித்து 2வது நாளாக விசிகவினர் உண்ணாவிரத போராட்டம்

அலங்காநல்லூர் டிசம்பர்.18

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே ஆதனூர் கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கொடிக்கம்பம் 25 வருடங்களாக உள்ள நிலையில் தற்போது அதன் அருகில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு டாக்டர் அம்பேத்கர் மாலை நேர படிப்பகம் என்ற பெயரில் அலுவலக கட்டடத்தை கட்ட தொடங்கியுள்ளனர்



இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு வெளிச்சம் கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கொடியேற்றிய விவகாரத்தில் வருவாய் துறையினர் மூன்று பேர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு பின்பு வருவாய்த் துறையின் தொடர் போராட்டம் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலையிட்டு தற்காலிக பணம் நீக்கத்தை ரத்து செய்து மீண்டும் பணி வழங்கிய நிலையில் வருவாய் துறையினர் அலங்காநல்லூர் அருகே ஆதனூர் கிராமத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கட்டி வரும் டாக்டர் அம்பேத்கர் மாலை நேர படிப்புக கட்டிடத்திற்கு அனுமதி உள்ளதா அனுமதி பெற்ற இடமா இதை கட்ட அரசு அனுமதி உள்ளதா என்று கூறி விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் மூன்று 3 நபர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளதாக தெரிகிறது.

இதனை தொடர்ந்து நோட்டீசை பெற்றுக்கொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் வருவாய்த்துறையினர் நோட்டீசை திரும்ப பெறவேண்டும் அல்லது அம்பேத்கர் மாலை நேர படிப்பகம் கட்ட அனுமதி தர வேண்டும் என்று கூறி தற்போது ஆதனூர் கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் இரண்டாவது நாளாக கண்டன போராட்டம் நடத்தி வருகின்றனர். இது குறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் கூறுவது அம்பேத்கர் மாலை நேர படிப்பக கட்டிடத்திற்கு அனுமதி மறுக்கும் வருவாய்த்துறையினரை வன்மையாக கண்டிக்கிறோம் கட்டிட அனுமதி விஷயமாக நோட்டீஸ் அனுப்பிய வட்டாட்சியர் நோட்டீசை உடனடியாக திரும்ப பெற வேண்டும் கட்டிடம் கட்ட தொடர்ந்து எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் இல்லையென்றால் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் அலங்காநல்லூரில் தொடர் உண்ணாவிரத போராட்டம் மற்றும் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றனர்.



இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகில் காட்டுப்பன்றி கடித்ததால் படுகாயம் அடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் விவசாயி முத்துராமலிங்க பட்டியைச் சேர்ந்த இளைஞர்களை விவசாய சங்க செயலாளர் பாஸ்கரபத்மநாபன் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார். மேலும் வனவிலங்கால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய நிவாரணம் வழங்கவும் மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொண்டார்.

## களஆய்வு மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 19ந்தேதி ஈரோடு பயணம்

ஈரோடு டிச 18

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாவட்டம்தோறும் கள ஆய்வு செய்து அரசு விழாவில் பங்கேற்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார். கட்சி நிர்வாகிகளை சந்தித்து கட்சி வளர்ச்சி குறித்து பேசி வருகிறார். அதன்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்துக்கு வருகிற 19ந்தேதி, 20ந் தேதி என 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். 19ந் தேதி (வியாழக்கிழமை) சென்னையில் இருந்து காலை 10 மணி அளவில் இருந்து விமானம் மூலம் கோவை வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து சாலை வழியாக ஈரோட்டுக்கு அங்கு 20க்கும் மேற்பட்ட இடங்களில் முதலமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது. பின்னர் மதியம் 1 மணிக்கு முதலச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு விருந்தினர் மாளிகைக்கு சிறிது ஓய்வு எடுக்கிறார். பின்னர் மாலை 5 மணி அளவில் மேட்டுக்கடை பகுதியில் தங்கம் மகாலில் நடக்கும் தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். மாலை 6 மணி அளவில் தி.மு.க. கொள்கை பரப்பு இணைச்செயலாளர் சந்திரக்குமார் இல்ல திருமண வரவேற்பு விழாவில் பங்கேற்கிறார்.



இரவில் ஈரோடு விருந்தினர் மாளிகையில் தங்குகிறார். அதைத்தொடர்ந்து 20ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு ஈரோடு சோலார் புதிய பஸ் நிலையத்தில் நடக்கும் அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொள்கிறார். ஏற்கனவே முடிக்கப்பட்ட வளர்ச்சித்திட்ட பணிகளை திறந்து வைப்பதுடன், புதிய வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கிறார். ஈரோடு சூரம்பட்டி நால்ரோட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் ரூ.16 கோடி செலவில் கட்டப் பட்ட 6 தளங்கள் கூடிய அடுக்கு மாடி குடியிருப்புகள், வணிக வளாகம், ஈரோடு பஸ் நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகம், நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தப்பட்ட வெளிவட்ட சுற்றுச்சாலை (ரிங்ரோடு), ஈரோடு வைரா பாளையத்தில் அமைக்கப்பட்ட கூடுதல் உரக்கிடங்கு, சென்னிமலையில் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். சோலாரில் ரூ.18 கோடியே 48 லட்சம் செலவில் கட்டப்பட உள்ள காய்கறி, பழங்கள், மளிகை என மொத்த சந்தை வளாகம் கட்டும் பணியை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து பல்வேறு துறைகளின் சார்பில் சுமார் 50 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். முதலமைச்சர் வருகையை முன்னிட்டு அமைச்சர் முத்துசாமி, மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமையில் அதிகாரிகள் விழாவுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.,

## வட்டார வள மையத்தின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றிய சின்னமனூர் நகராட்சி

சின்னமனூர், டிச.18

தேனி மாவட்டம் முழுவதும் கடந்த சில தினங்களாக நல்ல மழை. அதன் தாக்கமாக கடந்த டிச.13 அன்று வெள்ளிக்கிழமை பெய்த கனமழையால் சின்னமனூர் வட்டார வள மையம் அலுவலகத்தை மழைநீர் சூழ்ந்து கொண்டது.

உடனடியாக வட்டார வள மைய மேற்பார்வையாளர் நகர் மன்ற தலைவரை தொடர்பு கொண்டு மழைநீரை அகற்றி தருமாறு கேட்டுக் கொண்டதன் பேரில்,

உடனடியாக நகர்மன்ற ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் வட்டார வள மையம் வருகை புரிந்து தேங்கி இருந்த மழைநீரை அகற்ற ஏற்பாடுகள் செய்தனர்.

உடனடியாக தேங்கிய மழை நீரை அகற்றிய நகராட்சி நிர்வாகத்திற்கு வட்டார வள மையம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161